கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)
மலர்: 97 இதழ்: 48
மார்கழி 16 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## கொழும்பு மேற்றிராசன சங்கம் வறிய இளைஞருக்கு உதவ முடிவு

கொழும்பு மேற்றிராசன சங்கம் அண்மையில் புதிய வருடத்துக்கு இளைஞர் பலர் அடங்கிய செயற்குழுவை நியமித்ததன் பயனாக, இளைஞரின் பிரச்சினைகளில் அச்சங்கம் விசேஷ கவனம் எடுத்துவருகின்றது. சர்வகலாசாலைப் பிரவேசத்துக்கு அனுமதிக்கப்பட்டும் வறுமையின் காரணமாக அங்கு சேர்ந்துகொள்ள முடியாது தயங்கும் இளைஞர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கும், பயங்காவாதிகளெனக் கருதப்பட்டு மறியலில் வைக்கப்பட்டு, அண்மையில் வெளிவந்திருக்கும் இளைஞர்களுக்கு அவர்கள் இழந்துபோன பதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அது வழிவகைகள் தேடி வருகின்றது.

## திருச்சபையைத் திருத்துபவர்களா, அன்றேல் அழிப்பவர்களா?

2-ம் வத்திக்கான் சங்கத்தின்பின் தம்மைக் கத்தோலிக்கர் எனக்கூறிக் கொள்ளும் சில தீவிரவாதிகள் விசுவாசத்துக்குரிய சில சத்தியங்களை தமமனப்போக்குக்கு ஏற்றவிதமாக திரித்துவருவதை சென்றவாரப் பகிரங்கபேட்டியின்போது பரிசுத்ததந்தை கடுமையான வார்த்தைகளை உபயோகித்துக் கண்டித்தருளினர். "இவர்கள் திருச்சிலுவையில்லாத் திருச்சபை ஒன்றையும், உத்தானம் முதலிய சத்தியங்களில்லாப் போதகங்களையும தழுவுகின்றனர். இதன் மூன் பல சமயபிரிவினைகள் இருந்தது போல மேலும் பிரிவினைகளுக்கே இவர்கள் போக்கு உதவுகின்றது. தேவன் அருளிய சத்தியங்களைப் போதிப்பதே திருச்சபையின் வேலையல்லாது மனித அறிவுக்குள் அடங்குவது மாத்திரம் போதிப்பது அதன்வேலை அல்ல என்பதை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும்" எனப் பகர்ந்தார் பரிசுத்த பாப்பரசர்.

### பசாசு உண்டு என்பதை மறக்கவேண்டாம் பரி. தந்தை

சென்ற மாதம் 15-ம்திகதி வத்திக்கானில் அளித்த பகிரங்கப் பேட்டியில் பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் மீளவும் ஒருமுறை பசாசையும் அதன் தந்திரங்களையும்பற்றி எடுத்துக்கூறினர். இக்காலத்தில் கத்தோலிக்கர் பலர் பசாசு இருக்கிறதென்பதைப்பற்றிய சிந்தனையில்லாதிருக்கிருர்கள்; என்றுலும் பசாசு உண்டு என்பதற்கு வேதாகம குறிப்புகளும் திருச்சபையின் படிப்பினைகளும ஏராளமாய் ஆதாரங்கள் கொடுக்கின்றனவென்றுங்கூறி அவற்றை எடுத்துக் காட்டினர். மேலும் பசாசு பரிசுத்த தந்தையை அதிகம் பயப்படுத்துகின்றதாயிருப்பதால் திருச்சபை அளிக்கும் வரப்பிரசாதங்களை ஏராளமாய்ப் பெற்று பரிசுத்தத்தில் பலமுள்ளவர்களாயிருக்கக் கேட்டுக்கொண்டார்.

### சுயநன்மைக்கு மாத்திரம் மன்றுடுவதா?

சில தினங்களுக்கு முன் கம்பொலையில் நடந்த சதாசகாய மாதாவின் வணக்க வழிபாட்டின் ஆயிரதினமுடிவைக் கொண்டாட அங்கு குழுமியிருந்த பல நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு அன்று அளித்த பிரசங்கத்தில் கண்டி மேற்றிராணியார் லீயோ நாணயக்கார அடிகளார் எங்களுடைய செபம் பிறர்சிநேகமுடையதாயிருப்பதன முக்கியத்தை எடுத்துக்காட்டினர். சதாசகாய மாதாவின் வழிபாட்டுத் தினங்களில் வாசிக்கப்படும் விண்ணப்பங்களும் நன்றி கூறுதல்களும் பெரும்பாலும் சுயநன்மைக்காகவே நாம் செபிக்கிறேமென்பதைக் காட்டுகிறதென்றும், எங்களைப்போல பிறத்தியாரையும் நேசிக்கக்கடமைப்பட்டிருக்கிறேமென்பதையும் அடிகளார் வற்புறுத்தினர்.

### யூகன்டா வேதபோதகர்களை அதிபர் அமின் எச்சரித்தார்

பெரும்பாலும் கத்தோலிக்கர் வசித்துவரும் யூகன்டா தேசத்தில் சேவைசெய்துவரும் ஐரோப்பிய வேதபோதகர்களுடன் அத்தேசத்தில் இப்போது தலைவராக இருக்கும், தளபதி அமின் அவர்கள் கடுமையாக நடந்துவர ஆரம்பித்திருக்கிருர். ஏற்கனவே அத்தேசத்திலுள்ள வேதபோதகர்கள் யாவரும் ஆபிரிக்கர்களாகியிருப்பதைத் தான் விரும்புவதாக அறிவித்துள்ளார். அதன்பின் ஐரோப்பிய வேதபோதகர்கள் அநேகர் வேஷம் தரித்த பிறநாட்டுச் சதிகாரப் போர்வீரர் எனக்கூறியிருக்கிருர். சென்ற வாரம் அந்நாட்டிலுள்ள ஐரோப்பிய வேதபோதகர்களின் புள்ளிவிபரங்கள் தயாரிக்கக் கட்டளையிட்டிருக்கிருர். கிறீஸ்தவ வேதபோதகர்களின் சேவையைச் சில மாதங்களுக்குமுன் பெரிதும் பாராட்டிவந்த இத்தலைவரின்போக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துவருகிறது. அங்கே குருமார், கன்னியர், துறவிகள் சுமார் 1000 ஐரோப்பியர்கள் உளர். பெரும்பாலானோர் இத்தாலி, இங்கிலாந்து, பிரான்சு, ஒல்லாந்து ஜேர்மனி தேசத்தைச் சேர்ந்தவர்கள்.

### 12-ம் பத்திநாத பாப்புவின் புனித பட்டம் எப்போது ஆகும்?

12-ம் பத்திநாத பாப்பரசருக்குப் புனிதபட்டம் அருளுவதற்கு ஆகவேண்டிய ஆராய்வுகளுக்குப் பொறுப்பாளியாகிய வண. போல் மொலினறி சுவாமியாரை ஆங்கில பத்திரிகை நிருபர் இதுபற்றி விசாரித்தபோது, சாட்சிகள் அனைவரும் விசாரிக்கப்பட்டு விட்டார்களென்றும் இதன்பின் அதில் குற்றங்குறைகளைக் கண்டுபிடிக்கும் நிபுணரின் வேலை தொடங்கப்படுமென்றும் இது மேலும் சில வருடங்கள் எடுக்கலாமெனவும் கூறினர். பாப்பரசர் 12-ம் பத்திநாதர் மக்களுடன் நெருங்கிப் புழங்கவில்லையென்பதும், அவர்மேல் சுமத்தப்பட்ட யூத இன விரோதக் குறையுமே பிரதானமாக குற்றம்பிடிக்கும் நிபுணர்குழுவின் விசேஷ ஆராய்வுக்கு உள்ள கருமமெனவும் அவை ஆதாரமில்லாக் கூற்றுக்களென நிரூபிக்கப் போதிய அத்தாட்சிகள் உண்டெனவும் அவர்கூறினர்.

### ஐ. ஆர். ஏ. இன் கொட்டம் அடக்கப் படுகின்றது

அத்துமீறித் தனத்துக்கு தான் தோன்றி வீரர்களாக வடஅயர்லாந்திலும் தென் அயர்லாந்திலும் சென்ற பல வருடங்களாக விளங்கிவரும் அயர்லாந்து புரட்சி சைனியமானது அடங்காக் குணங்காட்டி தென்அயர்லாந்திலும் வன்செயல்களில் ஈடுபட்டதன் காரணமாக அயர்லாந்து மக்களின் ஜனதிபதியாகிய 90 வயது நிரம்பிய டிவலெரு அவர்கள் அவ்வியக்கத்தை ஒழித்துக்கட்ட அத்தேச பொலிசாருக்கு அண்மையில் முழுஅதிகாரமும் கொடுத்திருக்கின்றூர். வடஅயர்லாந்தில் அல்ஸ்ரார் பிரிவில் சிறுபான்மையினராகிய கத்தோலிக்கருக்குத் தான்தோன்றிக் காவலராக வன்செயல்களில் ஈடுபட்டுவந்த இப்புரட்சிச் சைனியத்தினர் அண்மையில் பலாத்கார செயல்களில் தென்அயர்லாந்திலும் விசேஷமாக டப்ளின் நகரிலும் கைகாட்டி வரத்தொடங்கியதே ஜனதிபதி டிவலெராவின் செயலுக்குக் காரணமாகும். இச்செயலினல் ஐ. ஆர். ஏ. இன் கொட்டம் விரைவில் அடக்கப்பட [illegible] எதிர்பார்க்கலாம்.

### வேதபோதக அவசியத்தை உணரவேண்டும்

பிரான்சுதேச லையொன்சு நகரில் உத்தம கத்தோலிக்க மாது பௌலீன் ஜெறிகொட் அம்மையாரால் தொடங்கிவைக்கப்பட்ட வேதபோதக உதவிச்சங்கத்தின் 150-ம் வருட நிறைவைப் பிரான்சிய மக்கள் கொண்டாடியபோது பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் அந்நகர கருதினல் றெனுட் அடிகளாருக்கு அனுப்பிய பாராட்டுச் செய்தியில் பிரான்சு தேச மக்கள் வேதபோதக வேலையில் என்றும் காட்டிவரும் ஊக்கத்தை வருங்காலத்திலும் தொடர்ந்துகாட்ட வேண்டுமென்றும் வேதபோதக வேலைக்கு ஆரம்பத்திலிருந்தே பலதடைகள் ஏற்பட்டிருந்தும், அது ஒருபோதும் கைவிடப்பட்டதில்லையென்றும், வேதபோதக வேலையின் பிரதம சத்துராதி அதன் அவசியத்தைகத்தோலிக்கமக்கள் சிற்சில தருணங்களில் உணராதிருப்பதேயென்றும் கூறியிருக்கின்றூர். இவ்வைபவத்தில் பங்குபெற ஏராளமான பிரான்சியமக்களும் அகில உலக தேசபிரதிநிதிகளும் கூடியிருந்தனர். வேதபோதக அலுவலில் பரிசுத்த தந்தை அளிக்கும் ஊக்கம் மிகப்பிரதானமானது என்பதே ஏகோபித்த அபிப்பிராயமாகும். வேதபோதக கருமம் பாப்பரசர்மார் ஆரம்பத்தில் போதகர்களை அனுப்பிவந்த முறைகளைப் பரிசுத்த தந்தை அனுப்பிய செய்தியில் விளக்கி அதிலுள்ள குறைபாடுகளையும் சுட்டிக்காட்டினர். பௌலீன்ஜெறிகொட் அம்மையார் இவ்வேலைக்கு அளித்த ஊக்கத்தை இக்கால பொது நிலையாளர் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே பரிசுத்த தந்தையின் தான வேண்டுகோளாகும்.

## இலகுவாகப் பெற்றதன் அருமை தெரியாது

சென்ற வாரம் குருநாகல் புனித அன்னம்மாள் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய அக்கல்லூரித் தலைவர் சங்கைக்குரிய சகோதரர் அலக்சாந்தர் அடிகளார் அரசாங்க உதவியால் இலவசக்கல்வி பெற்றுவரும் மாணவர் பெரும்பாலும் தங்கள் கல்வியில் கவனமில்லாதிருப்பதையும், கஷ்டப்பட்டுப் பள்ளிக்கூடக் கட்டுப்பணத்தைச் செலுத்தும் மாணவர் கல்வியில் கண்ணும் கருத்துமாயிருப்பதையும் சுட்டிக்காட்டி இலவசமாகப் பெற்றுக்கொள்ளும் எவற்றிலும்கவனக்குறைவுஇருப்பது இயற்கையாகையில் அப்பள்ளிக்கூட மாணவரின் பெற்றோருக்கு தமது பிள்ளைகளின் கல்வி ஊக்கத்தில் விசேஷ கவனமெடுத்துவரக் கேட்டுக் கொண்டார். அவ்வைபவத்துக்கு அப்பிரிவின் அங்கிளிக்கன் சபை ஆயர் லக்ஷ்மன விக்கிரமசிங்க அடிகளார் தலைமை வகித்தது ஒரு விசேஷ சிறப்பாக விளங்கிற்று.

## ரொடிசியாவுக்கு ஒரு சுதேச ஆயர்

ரொடிசியாதேச தலைநகராகிய சோல்ஸ்பெரி நகரமேற்றிராசன ஆயராகிய அதிமேற்றிராணியார் மாக்கோல் அடிகளாருக்குத் துணை ஆயராக 40வயதுநிரம்பிய சுதேசி ஒருவர் சென்றவாரம் நியமனம் பெற்றிருக்கிருர். பற்றிக் சக்காய்பாசுவாமியாரே இவர். புதிய மேற்றிராணியார் அவரது பக்தி வைராக்கியத்துக்கும், கல்வி அறிவுக்கும் சுயபாஷைப் பாண்டியத்துக்கும் பெயர்பெற்றவர். சோல்ஸ்பெரிநகரஅங்கிளிக்கன்கிறீஸ்தவ சபை மேற்றிராசனத்திலும் ஒரு சுதேச துணை ஆயர் தொண்டாற்றி வருகிருர். இவ்விரு நியமனங்களும் அத்தேச கிறீஸ்தவசபை அதிகாரம் விரைவில் சுதேசிகளின் கையில் ஒப்படைக்கப்படவிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

### கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்

நாள்: 17-12-72
நேரம்: மாலை 7மணி;
நடாத்துபவர்:
சகோ. எட்வேர்ட் பீரிஸ், அ. ம. தி.

* * *

நேரம்: மாலை 7-25
கிறீஸ்துபிறப்பு மகிழ்ச்சிப் பாடல்கள்
பங்குபற்றுவோர்:
கண்டி குருமட அ. ம. தி. சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆளவிரும்புகிற அன்பைக்காட்டிலும் ஆட்படுகிற அன்பு மிகவும் பக்குவமானது; ஆளவிரும்புகிற அன்பிலே சுயநலமும், அகங்காரமும் உண்டு; ஆட்பட விரும்புகிற அன்பில் தியாகத்தைத் தவிர, வேறொன்றும் இல்லை."

— பொன்விலங்கு

## சத்தியவேத பாதுகாவலன்

## நத்தார்ச் சிந்தனை

நவீனகால ஓவியர் ஒருவர் திருக்குடும்பத்தினர் ஏரோதனின் கோபத்துக்கஞ்சி ஓடுவதைப் படமாகத் தீட்டினர். முதலில் அப்படம் பார்ப்பதற்கு விநோதமாகத் தோன்றியது. ஏனெனில் அதில் சூசையப்பர் கன்னித்தாயையும அவளது குழந்தையையும் வெடிகுண்டுகள் துப்பாக்கி ரவைகளிலிருந்து பாதுகாப்பதற்காக அவர்களை ஒரு ஜீப்வண்டியில் ஏற்றிச் செல்கிறார். ஆயினும் ஆழ்ந்து சிந்தித்தால் இக்கருத்தில் விநோத மொன்றும் இல்லை. ஏனெனில், கிறிஸ்தவன் ஒருவனும் மறக்கக்கூடாத ஓர் உண்மையை இது எடுத்துக்காட்டுகிறது. அந்த உண்மை என்னவென்றால் கிறிஸ்துநாதர் இடர்ப்படுவோரும் துன்புறுத்தப்படுவோரும் தம்மின் வேறல்லர் எனத் தெளிவாகக் காட்டியமைதான். மனுக்குலத்தில் துன்பப்படுவோரெல்லாம் கிறிஸ்துநாதரே. கிறிஸ்தவர்கள் தம்மைவிட வாய்ப்புக் குறைந்தோரை என்ன விதமாக நடத்துகிறார்களோ அதைக் கொண்டே தீர்ப்பிடப்படுவார்கள் என அவர் எச்சரித்திருக்கிறார். "எமது சகோதரர்களில் மிகச்சிறிய ஒருவருக்குச் செய்ததை எமக்கே செய்தீர்கள்." கிறிஸ்து உலகில் அவதரித்தபோது இல்லிடமின்றி ஏழ்மையில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தமை எமது மனதை உருக்குகின்றது. ஆனால், இன்று எம் கண்ணெதிரிலேயே எத்தனை ஏழைகளைக் காண்கிறோம்? எமது அன்பிற்குரியவர்கள் தமக்குத் தேவையான பொருள்களின்றி இடர்ப்படும்போது அது எமக்கும் துன்பத்தைத் தருவதாகும். ஏனெனில், ஒரு கிறிஸ்தவனுக்கு அனைவரும் அன்பிற்குரியவர்களே. மனித வாழ்வை நிறைவுபெறச் செய்யும் அத்தியாவசிய பொருள்களுமின்றி எம்மைச் சூழவா எத்தனையோ பேர் துன்பப்படும்போது நாமும் வருந்தாமலிருக்க முடியாது. அந்த வருத்தம் தான் நாம் அவர்களுக்கு என்ன உதவி செய்ய முடியும் எனச் சிந்திக்கவும் அச்சிந்தனையைச் செயற்படுத்துவதால் இன்பம் பெறவும் வழி செய்யும்.

உண்பதற்குப் போதிய உணவும், நல்லவீடும், சுகசௌகரியங்களும், மனைவி, மக்கள் நண்பர்களுமுடையவன் தான் சில சமயம் இந்த நல்ல காரியங்களைத் துர்ப்பிரயோகம் செய்து கிறிஸ்துநாதருக்கு துக்கம் விளைவித்தமைக்காக மனம் வருந்தக் கூடும். அதே போல சாதாரண வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளுமின்றி அட்ட தரித்திரத்தில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களின் நிலையும் அவனது மனதை வருத்தும். பசி, நோய், அசுத்தம், பயம் ஆகியவற்றின் மத்தியில் இருப்போரையிட்டு, ஓரளவு சௌகரியங்களை அனுபவிப்பவர்கள் மனம் வருந்தி அவர்களுக்குத் துணைபுரிய எண்ணினால் அவர்கள் செயல் இரு பட்சத்தாருக்கும் இந்த நத்தார்த் தினத்தை இன்பகரமாகக் கழிக்க வழிசெய்யும். அனாதை மடங்களிலும், வயோதிபர் இலலங்களிலும், தமது அயலிலும், விசாரணைப் பங்குகளிலும் செய்யத்தக்கது எவ்வளவோ உண்டு. நாம் செய்யக்கூடியது மிக அற்பமாக இருந்தயோதினும் இவ்வளவாவது செய்யும் பேறு எமக்குக் கிடைத்ததே என்ற திருப்தி உண்டாகும்.

தமது இலௌகிகப் பொருள்களை பிறருடன் பகிர்ந்து அதனால் இன்பம் அடையும் கிறிஸ்தவன் தனது செல்வத்துட் பெருஞ் செல்வமாகிய கிறிஸ்துநாதரை அறியாத மக்களுக்காக வருந்தாமலும், அவர்களுக்கு அவரைக் கொடுக்க முயற்சிக்காமலும் இருக்க ஒருப்படுவானா? கிறிஸ்துநாதரைப் பிறரில் நாம் காண்பதைப்போல் பிறரும் அதே கிறிஸ்துநாதரை எம்மிடத்தில் காணக்கூடியதாயிருக்க வேண்டும்.

## 2-ம் வத். சங்கத்தின் பத்தாண்டு நிறைவு

2-ம் வத்திக்கான் சங்கம் 23-ம் அருளப்ப பாப்பரசரால் திறந்து வைக்கப்பட்டு பத்தாம் ஆண்டு நிறைவுற்றிருப்பதை அன்று தாம் அளித்த பகிரங்கபேட்டியில் 6-வது சின்னப்ப தந்தை மக்களுக்கு நினைவூட்டி அதனை வழிநடத்திய தேவதாயாருக்கும், 23-ம் அருளப்ப பாப்பரசருக்கும் நன்றி மறவாதிருக்கும்படி கேட்டுக் கொண்டார். வத்திக்கான் சங்கத்தின் பயனாக திருச்சபை பெற்றிருக்கும் புதிய சிறப்புகளை மக்கள் இப்போது உணர்ந்து அவற்றைப் போற்றிவரும் அதே காலத்தில் திருச்சபையில் விசேஷ அழைப்புப் பெற்ற ஒருசிலர் மதிப்புள்ள தமது பதவிகளை உதாசீனம் செய்வதால் ஏற்படும் மனவேதனை ...பரி. தந்தை தெரிவித்தார்.

# இறைவாக்கு வழிபாடு

## திருவருகைக் காலத்தின் 3-ம் ஞாயிறு

**இசை. 61: 1—2, 10—11, 1தெச. 5: 16—24, அரு. 1: 6—8, 19—28**

### உம்மைப்பற்றி என்ன சொல்லுகிறீர்? நீர் யார்?

ஸ்நாபக அருளப்பரின் அருட்சியான போதனையைக் கேட்டவர்களும், புரட்சியான வாழ்வைப் பார்த்தவர்களுமான யூதர், தாம் ஆவலுடன் எதிர்பார்த்த மெசியா இவர்தானோ அல்லது இன்னுமொரு இறைவாக்கினரோ என்றறிவதற்காக அருளப்பரைப்பற்றி இருபெரும் கேள்விகளை எழுப்பினார்கள். முதலாவது: "உம்மைப்பற்றி என்ன சொல்லுகிறீர்? இரண்டாவது: நீர் யார்?"

அருளப்பரோ ஒழிப்பு மறைப்பின்றி, "நான் கிறிஸ்து அல்ல; நான் அவரின் வருகையைப்பற்றிய கூக்குரல்" என்றார். இந்த ஸ்நாபக அருளப்பர் யார் என்பதையும், அவரின் ஒரே பணி என்னவென்பதையும் அப்போஸ்தலரும், சுவிசேஷகருமான புனித அருளப்பர் அழகாக ஒரே வசனத்தில் வடித்துரைக்கின்றார்.

"அனைவரும் தம்வழியாக விசுவசிக்கும்படி, ஒளியைக் குறித்து சாட்சியம் அளிப்பதற்கு, அவர் **சாட்சியாக** வந்தார்." (7-ம் வசனம்)

இன்றைய வழிபாட்டிலே பங்கெடுக்கும் எங்களுக்கு ஸ்நாபக அருளப்பரைப்பற்றி எழுப்பப்பட்ட வினாக்களும், விடைகளும் மிகவும் கருத்தும், பொருத்தமும் நிறைந்தனவாக அமைகின்றன.

**"உம்மைப்பற்றி என்ன சொல்லுகிறீர்? நீர் யார்?"**

இந்தவினாக்களை எம்மட்டிலே உலகம் எழுப்பிக்கொண்டே இருக்கின்றது. எங்களுடைய போதனைகளும், திருச்சடங்குகளும், வாழ்க்கை முறைகளும், நம்பிக்கைகளும் உலக மக்களின் கணிப்பிலே புதிதாகவும், புதிராகவும், அசாதாரணமாகவும், அதிசயமாகவும் இருக்கலாம். ஆகையால், அவர்களுடைய வினாக்களில் கருத்துண்டு, காரணமுண்டு, வியப்பேதுமில்லை.

ஆனால், நாம் — இங்கு கிறிஸ்தவர்களாகக் கூடியிருக்கும் நாம் எம்மைப்பற்றி என்ன சொல்லப் போகின்றோம்? கிறிஸ்துவைப் பொறுத்தமட்டில் இன்று எம்முடைய இடம் என்ன? எம்முடைய பணி என்ன?

நாமெல்லோரும் ஒரேமனதாக "நாம் கிறிஸ்தவர்கள்" என்போம். ஆம், உண்மைதான். ஆனால் இதன் அர்த்தமென்ன? "நான் கிறிஸ்து, நீ கிறிஸ்து, நாம் எல்லோரும் கிறிஸ்துக்கள்" என்பதை உலகம் ஏற்காது. ஏனெனில், கிறிஸ்து ஒருவர்தான். அவர் மனித உருவத்தில் தோன்றி மறைந்துவிட்டார். அவரைப் பற்றி அறிந்தவர்களும் தெரிந்தவர்களும், ஓர் அளவிற்குப் புரிந்தவர்களும் பலர் இருக்கின்றார்கள். ஆனால், அவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைப்பது சரியல்ல. காந்தியைப்பற்றி அல்லது நெப்போலியனைப்பற்றி அறிந்தவர்கள் எம்முள்ளே பலர் இருப்பினும், அவர்கள்காந்தியுமல்ல, நெப்போலியனுமல்ல. ஆகையால் எங்களைக் கிறிஸ்தவர்கள் என்றபெயருக்கு உரிமையாக்குவது — எமது அறிவுமல்ல, ஆற்றலுமல்ல, ஆராய்ச்சியுமல்ல. ஆனால், ஆண்டவரின் அன்பு **அழைத்தலும்**, அவருக்காகச் சாட்சியம் அளிக்க உலகிற்கு **அனுப்புதலுமாகும்**.

ஸ்நாபக அருளப்பரை எப்படி அழைத்தாரோ, எதற்காக அனுப்பினாரோ அதே விதமாக எங்கள் ஒவ்வொருவரையும் **சீடராக அழைத்து**, தம் **சாட்சிகளாக அனுப்புகிறார், இறைவன்.**

நாம் சாட்சியம் கொடுப்பது அறிவுத்திறனால் அன்றி, ஆராய்ச்சிவல்லமையால் அல்ல. கண்டடைந்த ஒரு தத்துவத்திற்கோ அல்லது சத்தியத்திற்கோ அல்ல. உலகில் — விசேடமாக நீதிமன்றத்தில் காண்பதுபோல், ஒரு சம்பவத்தைப்பற்றியோ அல்லது சத்தியத்தைப் பற்றியோ அல்ல, நாம் கொடுக்கும் சாட்சியம் **ஓர் ஆளைப்பற்றி** — கிறிஸ்துவைப்பற்றி, அவருடைய இரட்சணிய செயல்களைப்பற்றி.

எங்கள் சாட்சியத்திற்கு, நாம் கிறிஸ்துவையும் அவர் இரட்சணிய சம்பவங்களையும் அறிந்திருந்தால் போதாது, தெரிந்திருந்தால் போதாது, படித்துப் புரிந்திருந்தாலும் போதாது. நாம் அவரையும், அவரது செயல்களையும் கண்ணால் பார்க்காவிட்டாலும், காதால் கேட்காவிட்டாலும், **விசுவாசத்தால் ஏற்க வேண்டும்.** கிறிஸ்துவையும் அவர்புரிந்த செயல்களையும் விசுவாசத்துடன்ஏற்காதவன் சாட்சியாக முடியாது; ஆகையால் கிறிஸ்தவனாகவும் முடியாது.

எங்கள் சாட்சியத்தின் வழியாகத்தான் உலகம் அவரை விசுவசிக்கும். "அனைவரும் தம் வழியாக விசுவசிக்கும்படியாக" எங்கள் வார்த்தையும், வாழ்க்கையும் கிறிஸ்துவின் சாட்சியத்திற்காக — கிறிஸ்துவை உலகிற்கு அளிப்பதற்காக அர்ப்பணிக்கப் பட்டிருக்கின்றன. நாங்கள் இந்த உன்னத அழைப்பை மறந்து — எமது சாட்சியத்தை மறுப்போமாயின், உலகில் கிறிஸ்து சாட்சியற்றவராவார்.

ஆகையால், எவ்வித சூழ்நிலை சுற்றாடலில் நாம் இருப்பினும்— கிறிஸ்தவர்கள் என்ற மட்டில் நாம் உலகிற்கு எமது வாழ்க்கையாலும், வார்த்தையாலும் பொறுப்பான சாட்சிகளாக இருக்க இறைவனை வேண்டுவோமாக.

**"அனைவரும் என்வழியாக விசுவசிக்கும்படி, கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியம் அளிப்பதற்கு, நான் சாட்சியாக உலகிற்கு அனுப்பப்பட் டிருக்கிறேன்."**

அருட்திரு:
எஸ். ஜே. இம்மனுவேல்
தேசிய குருமடம், கண்டி.

## விசுவாசிகளின் மன்றாட்டுக்கள்

1. இங்கே கூடியிருக்கும் நாங்கள் அனைவரும் ஆண்டவரின் அன்பினால் கிறிஸ்தவர்களாக அழைக்கப்பட்டோம் என்றும், அவ்வழைப்பின் மகிமையையும், பொறுப்பையும் உணர வேண்டுமென்று .........
2. எங்கள் அழைப்பிற்கிணங்க, நாம்எல்லோரும் கிறிஸ்துவையும், அவர் புரிந்த செயல்களையும் ஆழ்ந்த விசுவாசத்துடன் ஏற்றருள வேண்டுமென்று .........
3. எங்கள் சுற்றாடலிலும் விசேடமாகப் பிறசமயத்தவர் முன்னிலையிலும் எங்கள் வார்த்தையும், வாழ்வும் கிறிஸ்துவுக்குச் சான்றுபகர வேண்டுமென்று.........
4. எவருக்காகச் சாட்சியமளிக்கின்றோமோ அவரை வேதாகமத்திலும், திருஅருட்சாதனங்களிலும் விசேடமாக இந்தத் திருப்பலி விருந்திலும் அனுபவிக்க வேண்டுமென்று .........
5. இங்கே உண்ணவிருக்கும் திருவிருந்து நமது சமத்துவ சகோதரத்துவததிற்குச் சான்றாகவும், சமாதானத்திற்கு ஊற்றாகவும் அமைய வேண்டுமென்று......

அருட்திரு. எஸ். ஜே. இம்மனுவல்

மாற்ற முடியாத கவலைகளையிட்டு எமது மனதை வீணே வருத்துவது மடமை. வாழ்க்கை வாழும் கலையை மேற்கொள்ள வேண்டுமெனில் கவலையை மறந்துவிட முயல வேண்டும்;

R. W. ஸ்ரொக்மன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூணும்-துரும்பும்

(அருட்திரு டி. ஜஸ்தஸ் சின்னப்பு, O. S. P.)

இவர் நல்லவர்—ஆனல்... எவன் நல்லவன், எவன் கெட்டவன் என்று கணிக்கும் திறமையற்றவர். சூழ்ச்சிக்காரனிடத்தில் சிக்கிக்கொள்வர். தந்திரவாதி இவரைப் பம்பரமாக்கி விடுவான். "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள். மன்னியுங்கள், வெறுப்பவருக்கு நன்மை செய்யுங்கள், சபிக்கிறவர்களுக்கு ஆசி கூறுங்கள். ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு, மறு கன்னத்தையும் கொடுங்கள். உங்களுக்கு அன்பு செய்கிறவர்களுக்கு மாத்திரம், நீங்கள் அன்பு செய்தால், அதனுல் உங்களுக்கு என்ன பலன்? பகைவர்களுக்கும் அன்பு செய்யுங்கள், ஒன்றும் எதிர்பாராமல் கடன்கொடுங்கள்" இந்தப்போதனை நல்லதுதான். ஆனல், எந்த முற்போக்கான வழியையும் முழுதாகத் திணிக்கமுடியாது. வானத்தை எல்லையாக வைத்துப் பேசலாம். ஆனுல், வானத்துக்கும் பூமிக்குமிடையே வெகு தூரம். வாய்வீரம் பாயிலிருந்தும் பேசலாம். என்னத்தைச் சொன்னாலும், எத்தனைபேர் கேட்டு நடக்கப் போகிறார்கள்? ஏன் வீண் நேரம்போக்க வேணும்? சிலர் திருந்தவே மாட்டார்கள். பாவம், அந்தக் குடும்பம் கஷ்டப்படுகிறது. இந்தா அப்பா, கொஞ்சப்பணம். பிள்ளை குட்டிக்கு ஏதோ வாங்கிக்கொடு. அப்பன், பிள்ளை குட்டியின் பசியைப் பார்க்காமல் நேரே கள்ளுக்கடைக்குப் போவான். இந்தா அப்பா, உன் பிள்ளைகள் பள்ளியில் படிக்கப் புதுப் புத்தகங்கள். ஏதோ பிள்ளைகளாவது படித்து நல்லாய் வரட்டும். அவன், அந்தப் புத்தகங்களைக் கொண்டுபோய், அரைவாசி விலைக்கு விற்று, சூதாடப் போய்விடுவான். இந்தாடா தம்பி, மத்தியானம் ஏதாவது வாங்கிச் சாப்பிடு. பள்ளியிலே பசியோடிருக்காதே, என்று பணத்தைக் கொடுத்துவிட்டால், பையன் "பைப்" தண்ணீரை வயிறு நிறையக் குடித்துவிட்டு, சினிமாப் படம் பார்த்துவிட்டு வீட்டுக்கு வருவான். கள்ளனை இன்னொரு தடவை மன்னித்துவிட்டால், அவன் கண்ணையும் குத்திப்போட்டுக் கொள்ளையடித்திடுவான். கெட்டவர்களைக் கிட்டவிடாவிட்டால், தப்பித்தாவது வாழலாம். உலகைச் சரியாகப் புரியவேணும்; இல்லேபேல், உலகம் நம்மை ஏளனஞ்செய்யும்.பன்னிருவர் பல தடவைகளில் கிறீஸ்துவைப் பற்றிக் கோபம்கொண்டனர். இந்த மனிதன் எந்தப் பாவியையும் அணைக்கிறாரே? "அவரை" அவர்களால் திருத்தமுடியவில்லை. "அவர்" எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, ஒரு மாதிரிச் சிரித்துவிட்டு, எல்லோரையும் இரட்சிக்கவேணுமென்றே சொல்லி விடுவார். ஒரு பார்வை—அந்தப்பார்வையிலே, எதிரே நிற்கும் மனிதனின் உள்ளத்தின் மறைந்த சிந்தனை. தீமையாலவயும், அப்படியே தவறின்றிப் பார்த்திடுவார். அப்படியிருந்தும், காவாலி, கடைப்புளி, காமாகாரன், நயவஞ்சகன், நாடு குழப்பி, யாவரோடும், கனிவாகக் கதைத்திடுவார். ஏதோ கிறீஸ்துவின் நல்ல காலம், உலக அனுபவம் நிறைந்த பன்னிருவர், பக்கத்துணையாக நின்று, அவரைப் பிழைவிடாமல் பாதுகாக்கும் போர்வீரர் போல் அமைந்தனரோ !! பல சந்தர்ப்பங்களில், கிறிஸ்துவை நெருங்கி அணுகவிடாமல், அவரைத் தொட விடாமல், இப்பன்னிருவ நம் மக்களைத் தடுத்தனர் என்றும் விவிலியத்தில் வாசிக்கிறோம். ஏன்! பிள்ளைகளைக்கூடக் கிட்டப் போகவிடாமல் தடுத்த சந்தர்பபமும் உண்டு. புனிதருடைய போக்கு ஒரு விதமான பைத்தியம் போலத்தான். உலகத்திலே நடக்கிறது புரியாதவர் போலப் பழகுவர். புனிதரின் நன்மைத்தனத்தின் ஒளி, பிறர் குறையைக் காணவிடாத பெருஞ்சுடரோ !! எதுவாயினுஞ்சரி, [illegible] நன்மைத்தனத்தில், பிறரிலுள்ள தீமையைப் பொருட்படுத்தாத பெருந்தன்மையோ, அன்றேல் ஒருவித குருட்டுத்தனமோ இருந்தது. காலை நேரம்—மலையோரம் கிறிஸ்து நின்றார். இளந்தென்றல் அசைந்தது. பன்னிருவரும் அங்கு நின்றனர். கனிவான மொழியைக் கேட்க, அன்பின் செய்தியை அறிய, ஆவலோடு மக்கள் திரண்டனர். எங்கும் அமைதி. இடிமுழக்கம்போல் அவர் ஒலி எழுந்தது.

"தீர்ப்பிடாதீர்கள். நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டீர்கள், கண்டனம் செய்யாதீர்கள்; கண்டனம் பெறமாட்டீர்கள். மன்னியுங்கள், மன்னிக்கப்படுவீர்கள். எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" — அவர் பார்வை பல பக்கமும் போனது. அசையாமல், கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது கூட்டம். ஒரு நிமிடம் ஒன்றும் உரைக்காமல், மக்களை உற்றுநோக்கினார். காதை உடைத்துக் கொண்டு, மண்டைக்குள் இடித்ததுபோல்,

"உன் கண்ணிலே உள்ள விட்டத்தைக் கவனியாது, உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பையா பார்க்கிறாய்? வெளிவேடக்காரனே! முதலில் உன் கண்ணிலிருக்கும் விட்டத்தை எடுத்தெறி. பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க நன்றாய்த் தெரியும்" என்று முழங்கினார். தச்சனுக்குக் கண்ணில் மரத்தூள் விழுவது சாதாரணம். சிறு துண்டுகளும் விழுவது உண்டு. மரவேலை செய்யும் யேசுவுக்கு, மரத்தூளையும், துண்டுகளையும்பற்றி விபரிக்கச் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நன்றாய்ச் சொன்னார். நின்றவர்கள் கண்ணைக் கசக்கினர். தூசி கண்ணிலே விழுந்திருக்கலாம். "தீர்ப்பிடாதே" என்ற முழக்கம் எல்லோர் செவிகளிலும் இடிபோல் ஒலித்தது.

பொய்யன் எவரையும் நம்பமாட்டான். வேஷக்காரன் எல்லோரிடத்திலும் முகமூடி உண்டு என்றே எண்ணுவான. ஊர்வம்பளப்பவன், எல்லோரும் தன்னைப்போல் குப்பை கிளறி என்றே கருதுவான்—கள்ளன், நயவஞ்சகன, அனைவரும கள்ளர், அனைவரும் வஞ்சகர், எனறே ஓதுவான். அது மாத்திரமா? தம் தீமையை மறைக்க, மற்றவரைக் கெட்டவர் என்று வாய்கூசாமல் வீடுவீடாய்க் கதறும் கயவரும் உண்டு. தருணத்தைப் பிடித்து, தங்களை நல்லவர்களென்று உலகம் சொல்லும் என்றெண்ணி, தந்திரமும், மந்திரமும் போடும் இயந்திரங்களுமுண்டு. இராயப்பர் நிமிர்ந்து பார்த்தார்-குற்றமற்ற கிறீஸ்துவின் குரல் "தீர்ப்பிடாதே, தீர்ப்பிடாதே-பிறரைப்பற்றி தூற்றாதே" உலகம் எப்படி யேசுவைத் தீர்வையிடும்? தேவதூஷணம் கூறுபவன், மக்களைப் புரிந்துக்கொள்ள முடியாதவன், மக்கள் யாவரையும் மோட்சகரைசேர்க்க மனக்கோட்டை கட்டுபவன்—பணக்காரரை எதிர்ப்பவன்-பாவியை அணைப்பவன்—தொழிலாளி சார்பாகப் பேசுபவன்—சுருங்கிச் சொல்லின், "பைத்தியகாரன்." அப்படியே யூதகுலம் தீர்ப்பளித்தது. அதன் முடிவு, சிலுவை மரணம். சிலுவையிலிருந்தே, உலகைப்பார்த்துப் "பிதாவே இவர்களை மன்னியும்" என்றார். தன் எதிரியைச் சந்தித்து, அவனை மன்னித்து, அரவணைத்து, அன்போடு உரையாடுவார். யேசு காலஞ்செல்லச் செல்ல, இராயப்பரும் அவர் சகாக்களும், யேசுவின் போதனையின் போன்பைப் புரிந்துகொண்டனர். இவர்போல் எவருமே பேசவில்லை. இவர்போல் எவருமே வாழவில்லை. உலகம் முடியும்வரை, மக்கள் கண்களில் பூமியின் தூசி விழுந்துகொணடே போகும். தீர்ப்பிடாதே. உன் கண்ணிலிருப்பது தூண். உன் சகோதரன் கண்ணிலிருப்பது தூசி. "II இரா. 1/5—11.

முழு ஊக்கங்காட்டி உங்களிடம் விசுவாசத்தோடு நற்பண்பும், நற்பண்போடு அறிவும், அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு மனவுறுதியும், மனவுறுதியோடு இறைபற்றும், இறைபற்றோடு சகோதர நேசமும், சகோதர நேசத்தோடு அன்பும், இணைந்திருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். இப்பண்புகள் உங்களிடம் நிறைந்து செழிக்குமானுல் நம் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவை அறியச் செய்யும் அறிவைப் பொறுத்தமட்டில், இவை உங்களைச் சோம்பேறிகளாயும் பயனற்றவர்களாயும் இருக்கவிடா. இவை யாரிடம் இல்லையோ, அவன் குருடன் மங்கிய பார்வையுடையவன், முன்செய்த பாவங்களினின்று தூயவனுக்கப்பட்டதை அவன் மறந்துவிட்டான். சகோதரர்களே, நீங்களே அழைக்கப்பட்டீர்கள். தேர்ந்துகொள்ளப்பட்டீர்கள். அவ்வாத்தில் உறுதியாய் நிற்க [illegible] செய்தால் நீர்கள் ஒரு பொழுதும் தடுமாற மாட்டீர்கள். இங்ஙனம் நம் ஆண்டவரும் மீட்பருமான யேசுக்கிறீஸ்துவின் முடிவில்லாத அரசில் நுழையும் பேறும் உங்களுக்குத் தாராளமாக அருளப்படும்.

# ஒருவருக்கொருவர் சமாதானத்தை அறிவித்துக்கொள்வோம்!

(— A. T. Raj —)

அன்று ஞாயிற்றுக்கிழமை. முழுப்பூசை காண்பது கடன், நான் எனது நான்குவயதுக் குழந்தை விண்ஸ்டனுக்கு உடைகள் உடுத்தி, கையில எடுத்துக்கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டு விட்டேன். நானும் என் மனைவியும் ஒரு சிறு வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கின்றோம். எனக்கு வரும் வருமானத்தில் வீட்டு வாடகையையும் செலுத்தி, குடும்பத்தையும் கட்டிக் காப்பது பெரும் பாடாய்த்தான் இருக்கின்றது. கைப்பிடிப்புக் காலததில் சிறிது சிறிதாகக் கடன் வாங்கி அதுவும், சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல் பலவகைகளில் வட்டி குட்டி என்றுபெருகி, மலைபோல் உயர்ந்து, எங்களை விடிக்கு விடி மரிக்கச் செய்கிறது. எப்படியோ என் மனைவி தரும் சிறிய தைரியத்தாலும், இறைவன் தரும் கிம்மதியாலும்தான் நான் இன்னும்சிறிது தென்புடன், ஊருக்கு "மனிதன்" என்று சொல்லும் வகையில் நடமாடுகின்றேன். என்றாவது இறைவன் இச்சோதனைகளினின்று எங்களை விடுவிப்பான் என்று நாங்கள் உறுதியாக நம்பியிருக்கின்றோம். மேலும், நான் இவ்வாறெல்லாம் துன்பப்படுவது எனக்குத் தகுமே; ஏனெனில், என் பால்ய வாழ்வு அவ்வளவு அருவருப்பானது.

கோயிலை வந்தடைந்தாகிவிட்டது. இன்னும் திவ்விய பலி துவங்கவில்லை; நான் உள்ளே போய் இருக்கையில் அமர்ந்திருப்போமே என்று எண்ணி உள்ளே நுழைந்தேன். ஒரு வசதியான இடத்தில்போய் பையனையும் அமர்த்திவிட்டு நானும் முழந்தாளில் நின்று நற்கருணை ஆண்டவருக்கு நன்றிகூறினேன். இருக்கையில் அமர்ந்தேன். திருப்பலி துவங்கவில்லை. யாருக்குத்தான் பாராக்குப்பார்க்காமல் இருக்கமுடியும்? நானும் கோயிலை ஒரு நோட்டம் விட்டுவிட்டு, அருகில் அமர்ந்திருப்பவர் யாரென்று பார்த்தேன். ஆ! எங்கோ பார்த்த ஞாபகம், ஆமாம், அவன் எனமாஜி நண்பன் அண்டோனிதான். எத்தனை நாள் அவனைத் தேடி அலைகிறேன். அவனைக் கூர்ந்து நோக்கினேன். நல்ல அந்தஸ்தில் இருப்பவன்போல் காணப்பட்டான். அவன் என்னை இன்னும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்பதை உணர்ந்துகொண்டேன். அதற்குள் திருப்பலிபூசை துவங்கியது. குரு பீடத்தின் முன் நின்றார். அனைவரும் எழுந்து நின்றோம். இப்பொழுது அண்டோனி என்னைக் கூர்ந்து கவனிப்பதை உணர்ந்தேன்.

குருவிடமிருந்து, "திருப்பலி நிறைவேற்றத் தகுதி பெறும் பொருட்டு நம் பாவங்களை ஏற்றுக் கொள்வோம்" என்ற வார்த்தை வெளிப்பட்டது. என் மனத்தில் நான் எனது நண்பனுக்கு இழைத்த தீமைகள் அனைத்தும் மலைபோல் எழுந்து நின்றது. ஐயோ!நான் அவனுக்கு என்ன தீங்குதான் செய்தேன்; நானும் அவனும் பால்ய நண்பர்கள். எங்கள் மூலம், எங்கள் இரு குடும்பமும்கூட நட்பால் பழகிவந்தன. அவன் நல்லவன். எந்த வம்புக்கும் போகாதவன். ஆனல்நான் ...நேர் எதிரி. அதுவும் நானுக மாறவில்லை. நான் அன்று வாழ்ந்துவந்த அந்தப் பணக்காரச் சூழ்நிலை என்னை மாற்றியது. அந்தநேரம் இந்தஇனிய எளிய நண்பனின் நட்பு எனக்குப் பெரிதாகப் படவில்லை. மாறாக என்னையொத்த பணம் படைத்த நண்பர்களே எனக்குப் பெரிதாகத் தோன்றினர். இருந்தாலும், அவன் அந்த வேளையிலும் என்னைத் தேடி வந்து அன்பாய் இருந்தான். காரணம், என் பணத்துக்காக அல்ல; என்மேல் உள்ள உண்மையான அன்பால்; என்னை அவன்தான் திருத்தவேண்டும் என என்பெற்றோர் அவனைவற்புறுத்தி வேண்டிக் கொண்டதால்தான். அப்படிப்பட்ட நண்பனை நான் இழந்தேன்.

கோயிலில் அன்று நற்செய்தியாக நமதாண்டவர் பிறர் சிநேகத்தைப் பற்றிக் கூறிய சில வாக்கியங்கள் வாசிக்கப்பட்டன. எல்லாம் எனக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டது போல் இருந்தது. குரு பிரசங்கம் சொல்ல ஆரம்பித்தார். நான் எனது நண்பனைப் பார்க்கிறேன். அன்று அவனிடமிருந்த அதே அன்பும், பாசமும் இன்றும் அவன் முகத்தில் வழிந்தோடியது. இப்போதைய எனது நிலையைப் பார்த்து, அவன் கண்கலங்கியிருப்பதை நான் உணர்ந்தேன். இப்படிப்பட்ட நண்பனையா அன்று நான் அவ்வளவு கேவலமாய் எடைபோட்டேன். எத்தனை முறை நான்செய்த தீங்குகளுக்கு அவனே பொறுப்பாளிஎன நம்ப வைத்தேன், பள்ளிக்குச் செல்லாது வேறேகேவலமான இடங்களுக்குச் செல்வது, திருப்பலி காணது ஊரைச் சுற்றியது, இன்னும் எத்தனை குற்றங்களை நான் செய்தேன். அனைத்திற்கும் அவனையே காரணமாகச்சுட்டிக்காட்டினேன். அனைத்தையும் எனக்காக,நான் எவ்வித துன்பத்திற்கும் ஆளாகக் கூடாதென்ற ஒரே காரணத்திற்காக என் பெற்றோர் முன் எதையும் வெளிப்படுத்தாது, பழியை ஏற்றுக்கொண்டு தனிமையில் என்னைத் திருத்த முயற்சித்தானே.

ஆனல், நானோ அவற்றைப் பொருட்படுத்தாது அதையே ஒரு சாக்காக எடுத்துக்கொண்டு, மேலும் மேலும் பல தீய பழக்கங்களில்தானே ஈடுபட்டேன். அவனும்தான் எத்தனை நாள் பொறுப்பான், எத்தனை குற்றங்களைத்தான் தன் தலைமேல தாங்குவான். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டல்ல

(தொடர்ச்சி4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஒருவருக்கொருவர் ......

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வா. அதுவரை வீட்டிற்குத் தெரியாமல் வெளியே குற்றங்கள் பல புரிந்தநான், அன்றொருநாள் வீட்டிலேயே ஒரு கேவலமான செயலைச் செய்தேன். பணப்பேழையில் உந்தப்பட்டு வீட்டிலேயே ஒரு பெரிய தொகையைத் திருடினேன். ஆனால் விஷயம் வெளிவரும்போது வழக்கம்போல் இதையும் அண்டோனிமீது சுமத்தினேன். அவன் அப்பொழுதும் எனக்காக இரங்கினானே யொழிய, என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. நல்லவன் என்று என் பெற்றோரிடம் பெயர் எடுத்த அவன், அன்று எனக்காக, என் அன்புக்காக என் பெற்றோரின் அவச்சொல்லை ஏற்றுக்கொண்டு வெளியேறினான். அதற்குப்பின் இன்றுதான் அவனை முதன்முறையாகப் பார்க்கிறேன். இந்த எண்ணங்கள் என்னைவிட்டு நீங்கவும் குரு பிரசங்கம் முடிக்கவும் சரியாயிருந்தது.

எழுந்தேற்றம் ஆனது, ஒரு உண்மையான நண்பனை இக்கட்டான வேளையில் எனக்குக் கிடைக்க வைத்ததற்கு இறைவனுக்கு எனது நன்றியைச் செலுத்தினேன். அவனுக்கு நானிழைத்த தீங்குகள் அனைத்திற்கும், நான் அவனிடம் மன்னிப்புக்கோரத் தீர்மானித்தேன். எனது சீரழிவான வாழ்வை அவனிடம் கூறி, என்னையே நான் தேற்றிக்கொள்ள ஆசைப்பட்டேன். நேரம் போகப்போக அவனுடன் பேச வேண்டும் என்றஆவல் என்னுள் அதிகரித்தது. அண்டோனிக்கும் என்னுடன் பேச வேண்டும் என்றஆவல் உள்ளது என்பது, அவன் என்னையும், என் மகளையும்பார்க்கும் இரக்கமான பார்வை உணர்த்தியது. பலவருடங்கள் தொடர்ந்திருந்த அந்தப்பிரிவு எங்களை இன்னும் ஆட்டிப் படைப்பதை உணர்ந்தேன்.

பூசை தொடர்ந்தது. எவ்விதம் ஒருவரை ஒருவர் அன்புடன் நோக்கிப் பேசுவதுஎன்று இருவரும் தவித்துக்கொண்டிருக்கும் அந்தவேளை, குருவின்மூலமாக இறைவன், "ஒருவருக்கொருவர் சமாதானத்தை அறிவித்துக் கொள்ளுங்கள்" என்று அன்புக் கட்டளையிடுவது எங்கள் இருவர் காதுகளிலும் விழுந்தது. நாங்கள் ஒருவரை ஒருவர் அன்புடன் நோக்கினோம். அவன் பக்கம் திரும்பிக் கைகுவித்து, "சமாதானம்" என்று ஒருவருக்கொருவர் பல வருடங்களுக்குப்பின் வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டோம். வெள்ளை உள்ளம் கொண்ட அவன் என்னை மன்னித்து விட்டான் என்பதை நான் உணர்ந்தேன். என் ஆருயிர்நண்பன் மீண்டும் எனக்குக் கிடைத்துவிட்டான் என்ற இன்ப எண்ணமானது, என் உள்ளத்தில் நிறைந்து மேலும் பொங்கி இன்பக் கண்ணீராக என் கண்களில் வழிந்தோடியது. என் நண்பனுக்கும் அதே நிலைதான். கதைகளிலும், நாடகங்களிலும் பிரிந்தவர் கூடுவதை தற்செயலாக நடப்பதுபோல் காட்டுவார்கள். ஆனால் இறைவனையும், மனிதனையும் இணைக்கும் சமாதானப் பலியாக நற்கருணைப் பலியின்போதே அவரது திருமொழியாலேயே எங்களை இணைத்த அவரது அருட்பெருக்கை நினைத்துக் கண்ணீர் விட்டேன்.

திருப்பலி முடிந்தது. இருவரும் வெளியே வந்தோம். இருவரும் நெஞ்சாரத் தழுவிக்கொண்டோம. நான் பேச நினைக்கும் போதெல்லாம் பல வார்த்தைகள் முட்டி மோதிக்கொண்டு வெளிப்பட நினைத்ததால், நாக்குழறியது. நான் அவனுக்கிழைத்த தீங்குகளுக்கெல்லாம் மன்னிப்புக் கோரினேன். அவன் என்னைத் தடுத்து, என் நிலையறிந்து கண்கலங்கினான். அவனது இப்போதைய உயர்ந்த அந்தஸ்தை விளக்கினான். எனக்கு இனி எந்தவிதக் குறைவும் இருக்காதென என்னைத் தேற்றினான். நான் திருந்தினதே போதும்என பெரிதும் சந்தோஷப்பட்டான். அவனது உயர்ந்த உள்ளம்கண்டு என்னை நான் நொந்துகொண்டேன். அன்று இரு குடும்பங்களும் ஒன்றை ஒன்று சந்தித்துக்கொண்டன. அன்றிலிருந்து திருப்பலியில் சமாதானம் கூறும் சடங்கு என்வாழ்வின் தெய்வீக மணியாக ஒலிக்கிறது.

நன்றி: ஞானதூதன்.

## மரண சங்கதி

முல்லைத்தீவைச் சேர்ந்த களுக்கேணி மேற்குமாமூலை புனித அந்தோனியார் கோவில் பங்கைச் சேர்ந்தவரும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரித் தலைமை ஆசிரியர் திருச்செல்வம், காங்கேசன்துறை சுகாதாரப் பகுதி ஆர். ஜே. இராசநாயகத்தின் துணைவி குணமணி, தனியூற்று விவசாயக் கந்தோர் துரைராசசிங்கத்தின் துணைவி மணி என்பவர்களின் அன்புத் தந்தையும், திரு. இராசநாயகம், திரு. துரைராசசிங்கம், திருமதி ரீலைசா என்பவர்களின் மாமனாரும், ஆசிரியை செல்வி ரீ ஞானசௌந்தரி, டக்றர் செல்வி ஆனந்த சௌந்தரி, ஆசிரியை செல்வி பால சௌந்தரி என்பவர்களின் பேரனுமான சிவசம்பு சின்னத்தம்பி ஹென்றி அவர்கள் தமது இல்லத்தில் சிலவாரங்களாக நோய்வாய்ப் பட்டிருந்து, கடைசித் தேவதிரவிய அனுமானங்களைக் குறைவறப்பெற்று 25-11-72 சனிக்கிழமை பி. ப. 8-30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். மரிக்கும்போது இவருக்கு வயது 83. தமது கடைசிக்காலத்தை தேவதொண்டிலே செலவழித்தவர். தாழ்மை, பொறுமை, இரக்கம், பிறர்சிநேகம் நிரம்பப் பெற்றவர்.

இவரின் பூதவுடல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பி. ப. சமய, தேச ஆசாரப்படி மக்கள், இனசனர், அயலவர் சமேதராய்ச் சேமக்காலை கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படலாயிற்று.

இவரை இழந்து துன்புறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

அவரின் ஆன்மா
சாந்தியடைவதாக.

✠

சின்னப்பன் அவர்களின்

## மரண ஞாபகம்

பிறப்பு : 1914. இறப்பு : 1972.

"சீவியத்திலும் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

எனது அன்பு கணவரும், எங்களின் அருமை தந்தையுமான சின்னப்பன் அவர்கள் இறைவனடி சேர்ந்து ஒருமாதம் பூர்த்தி அடைகிறபடியால், அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ராகலை பரிசுத்த செபமாலை மாதா ஆலயத்தில் 19-12-72 காலை 7மணிக்கு திவ்விய பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், கன்னியர், கிறிஸ்தவர்கள் அனைவரும் இவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரிவால் துயருறும் !

மனைவி : மரியம்மாள் சின்னப்பன். பிள்ளைகள் : பிரான்சிஸ், வியாகுலமேரி, செசி, பிலோமினு, ரோஸ்மேரி, செல்வம், ஜெயபாலன். மருமகன்: எத்தள் பிரான்சிஸ் பேரப்பிள்ளைகள்: பெனடிக்டா பிரான்சிஸ், கிறிஸ்டி, சகாயம் மற்றும் இனசனர்.

சென் லெனுட்ஸ்,
ராகலை, ஆள்கருணேயா.

## நத்தாருக்கு ஆயத்தம்

நத்தார்த்தினம் நெருங்கிவருகின்றது. விழாக்கால மகிழ்ச்சி இப்பொழுதே தொடங்கிவிட்டது. வீட்டில் பலவித ஆயத்தங்கள். புதிய துணிமணிகள், வாழ்த்திதழ்கள், அறுசுவைப் பண்டங்கள் ஆயத்தமாகின்றன.

நத்தார் மகிழ்ச்சிநிறைகாலமாய் இருப்பதற்குக் காரணம் தான் என்ன? கிறிஸ்மஸ்மரம் நாட்டி சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதாலா? புத்தாடை அணிந்து சுற்றத்தவரைப் பேட்டிகாண்பதாலா? அன்றேல் அறுசுவை உணவு உண்டு ஆனந்திப்பதாலா? அல்லது தேவன் மனிதனாக மாட்டைக் குடிலில் அவதரித்து எமது மீட்பை நிச்சயப்படுத்தியதாலா?

இவைகள் அனைத்தும் கிறிஸ்மஸ் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்தபோதிலும் இறுதியாகக் கூறியதை உணராது, ஏனைய காரணங்களுக்காகக் கிறிஸ்மஸ் எமக்குச் சந்தோஷ தினமாக அமையின் கிறிஸ்மஸ் என்ற சொல்லே அர்த்தமற்றதாகிவிடும்.

கிறிஸ்மஸ் அர்த்தமுள்ள விழாவாக இருப்பதற்கு நாம் செய்யவேண்டியன யாவை? கிறிஸ்மஸ் குடில் வீட்டில அலங்கரிக்க வேண்டுமா? ஆம் சிறுவர்கள் அதைப் பெரிதும் விரும்புவார்கள். ஆனால் எம் உள்ளத்திலும் அவருக்கு ஒரு குடில் அலங்கரித்தே ஆக வேண்டும். மாட்டைக் குடிலைவிட, இம் மானிட குடிலை அவர் நிச்சயம் விரும்புவார். அதற்கு நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து தெய்விக வருகையாளருக்கு எம் உள்ளத்தை அளிப்போம். கிறிஸ்மஸ் தினத்தில் திருப்பலியின்போது நற்கருணை அருந்துவதால் அவரை எம்முள் ஏற்போம்.

இத்துடன் முடிந்ததா? எம்கடமை; இல்லவேஇல்லை. ஏழை எளியவர்கள், அன்றாடம் ஒருநேரக் கஞ்சிக்குக் காற்றாய்ப் பறப்பவர்கள், வருடம் பன்னிருமாதமும் துன்புறுபவர்கள் இவர்கள் மட்டிலும் எமக்கு ஒரு பெருங்கடமை உண்டு. அதை நான் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

—அவிதா

## விவேகானந்தா திருக்குறட் கலண்டர்

யாழ்ப்பாணம், விவேகானந்தா அச்சகம் வழமைபோல வெளியிட்டிருக்கும் 1973 ஆம் ஆண்டிற்கான விவேகானந்த திருக்குறட் கலண்டர் வரப்பெற்றோம். இந்தக் கலண்டரிலே [illegible] அந்தந்த நாட்களுக்குரிய ஒவ்வோர் இதழிலும் தமிழ், ஆங்கில, முஸ்லீம், வருடம், மாதம், திகதிகள் ஆகியன தமிழ், ஆங்கிலம், சிங்களம் எனும் மும்பாஷைகளிலும் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் அந்தந்தக் குறித்த தேதியில் வருகின்ற கத்தோலிக்கசமய கடனதிருநாட்களும், யாத்திரைப் பதிகளின் மகோற்சவ தினங்களும் இம்முறை சிறப்பாக இடம் பெற்றுள்ளன. மற்றும் அரசாங்கவங்கி விடுமுறை நாட்களும் சிறப்பாக இடம்பெற்று அத்துடன் அமாவாசை, பௌர்ணமி, அட்டமித்தினங்கள் ஆகியனவும் தரப்பட்டிருக்கின்றன. மேலும் ஒவ்வொரு தேதி இதழும் திருவள்ளுவர் குறளில் அர்த்த புஷ்டியான ஒவ்வொரு குறட்பாவும் புத்திபோதனை நிறைந்த ஒவ்வொரு நன்னெறிச் சுலோகமும் கொண்டு விளங்குவதுடன், கவர்ச்சிகரமும் பல இனமுமான படங்கள் இந்தக் கலண்டருடன் இணைக்கப்பட்டு இல்லங்களை அழகுபடுத்தக்கூடிய வகையிலே காட்சியளிக்கின்றன. கடதாசிக்கட்டுப்பாடு—விலையேற்றம்— தட்டுப்பாடு இவைகள் மத்தியிலும் வழமைபோல இக்கலண்டர் உரியகாலத்தில் இத்துணை சிறப்பாக வெளிவந்தமை பாராட்டத்தக்கது.

● ஓர் அமெரிக்கரான வண. மைக்கேல் மேர்பி சுவாமியார் தமது 80 ஆம் வயதிலே சமீபத்தில் குருப்பட்டம் பெற்றுக் கொண்டவர். இக்கால திருச்சபைக் குருமாரின் வரலாற்றிலே அதிகம் விருத்தாப்பிய வயதில் குருப்பட்டம் பெற்றவர் இவரே. ஞாபகத்துக் கெட்டியவரையிலே இதற்குமுன் அதிகம் பின்னிட்ட வயதில் அதாவது 71வயதில் குருப்பட்டம் பெற்றிருப்பவர் ஒருவர் மட்டுமே.

## உதிர்ந்த மலர்கள்

வாழ்க்கை என்பது ஒரு கடமை, ஒரு வேலை, குறிக்கோளுடையது. வாழ்க்கையில் இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்று உங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்காதீர்கள். ஒருவன் தன் சந்தோஷத்தை மட்டும் நாடுவானுகில் அகந்தையுள்ளவனுகிவிடுவான். —மாஜினி

* * *

நீ உண்மையான மனிதனுக விரும்புகிருயா? அப்படியானல், எது அழகுடையதோ, மேலானதோ, புனிதத்தன்மையுடையதோ அதனை அறிந்து போற்றுமளவுக்கு உன் வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள். அதேமாதிரி மற்றவர்களையும் பண்படுத்து. இது பெரிய காரியமல்லவென்று நீ நினைக்கலாம். நீ நினைப்பதைக் காட்டிலும் கடினமான சாதனை இதுதான். —மாஜினி

* * *

தெய்வத்தின் நீதிமன்றத்தில் சட்டங்களே வேறு— வழக்குகளே தனி; தீர்ப்புகளும் தனிதான். ஏ, மனிதா! அதுஉனக்கு எங்கே புரியப் போகிறது? —விஸ்வப்ரியா

## பூசை வழிகாட்டி — மார்கழி 1972

17. ஞாயிறு: திருவருகைக்கால 3-ம் ஞா. [ஊ]
வாசகங்கள்: இசை. 61: 1—2a, 10—11
1தெச. 5: 16—24, அரு. 1: 6—8, 19—28.

18. திங்கள்: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: எரெமி. 23: 5—8 மத். 1: 18—24.

19. செவ். நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: நீதி. 13: 2—7, 24—25, லூக். 1: 5-25

20. புதன் நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: இசை. 7: 10—14, லூக். 1: 26-28

21. வியா. நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: உன். 2: 8—14, லூக். 1: 39—48.

22. வெள்ளி: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: Iசாமு. 1: 24—28, லூக். 1: 46-56.

23. சனி: நாட்பூசை [ஊ]
வாசகங்கள்: மலக். 3: 1—4, 23—24,
லூக். 1: 57—66.

24. ஞாயிறு. திருவருகைக்கால 4-ம் ஞா. [ஊ]
வாசகங்கள்: 2சாமு 7: 1—5, 86—11,
உரோ. 16: 25—27, லூக். 1: 26—38.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மார்கழி மாதம் 16-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org